தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 94 | 4 Pages | 2.11.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 94 | 4 பக்கங்கள் | 2.11.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்**

**விளக்கம்:**
**ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும்.**

## புதிய காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகத்தில் 5 நாட்களுக்கு மிக கனமழை எச்சரிக்கை

டெல்லி, நவ.2

தமிழகத்தில் வரும் 7ம் தேதி முதல் 11ம் தேதி வரை மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்கு வங்கக்கடலில் நவம்பர் முதல் வாரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகிறது.

காற்றழுத்த தாழ்வு நிலை, தாழ்வு பகுதியாக மாறி, நவம்பர் 2வது வாரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக வரும் 7ம் தேதி முதல் 11ம் தேதி வரை, அதாவது 5 நாட்களுக்கு கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## மக்கள் முன் வசமாக சிக்கிய காங்கிரஸ்: கார்கேவுக்கு பிரதமர் மோடி பதிலடி

புதுடெல்லி, நவ.2



மாநிலங்களில் ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சி தேர்தலுக்கு முன் பல்வேறு அறிவிப்புகளை வெளியிடுகிறது.

ஆட்சிக்கு வந்தால் அவற்றை நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்தும் அக்கட்சி இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிடுகிறது என பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரதமர் மோடி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

தேர்தலுக்கு முந்தைய சில அறிவிப்புகளைக் கடைப்பிடிப்பதில் கட்சி ஆளும் மாநிலங்கள் எதிர்கொள்ளும் நிதிப் பிரச்சனைகள் பற்றிய அறிக்கைகளுக்கு மத்தியில், காங்கிரஸ் மாநில பிரிவுகள், சரியான பட்ஜெட்டையும், நிதிச் சிக்கல்களுக்கு வழிவகுக்காத வாக்குறுதிகளையும் அளிக்க வேண்டும்.

உண்மைக்குப் புறம்பான வாக்குறுதிகளை அளிப்பது எளிது. ஆனால் அவற்றை முறையாக செயல்படுத்துவது கடினமானது அல்லது சாத்தியமற்றது என்பதை காங்கிரஸ் கட்சி உணர்ந்துள்ளது.

ஒவ்வொரு பிரச்சாரத்தின் போதும் அவர்கள் மக்களுக்கு வாக்குறுதி அளிக்கிறார்கள். அதை அவர்கள் ஒருபோதும் வழங்கமுடியாது. இப்போது மக்கள் முன் மோசமாக அம்பலமாகி நிற்கிறார்கள்.

இன்று காங்கிரசுக்கு எந்த மாநில அரசுகள் உள்ளன? இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வளர்ச்சிப் பாதை மற்றும் நிதி ஆரோக்கியம் மோசமாக இருந்து வருகிறது. அவர்களின் உத்தரவாதங்கள் என அழைக்கப்படுபவை நிறைவேற்றப்படாமல் கிடக்கின்றன. இது இந்த மாநிலங்களின் மக்களுக்கு இழைக்கப்படும் பயங்கரமான வஞ்சகமாகும் என தெரிவித்துள்ளார்.

## 90 நாட்கள் ஆகியும் வயநாடு மறுவாழ்வுக்காக ஒரு பைசா வழங்காத மத்திய அரசு: பினராயி விஜயன் சாடல்



கேரளா, நவ.2

கேரள மாநிலம் வயநாட்டில் கன மழை மற்றும் நிலச்சரிவால் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஒன்றிரண்டு கிராமங்கள் முற்றிலுமாக உருக்குலைந்தன.

அந்த கிராமங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களை மறுசீரமைக்க, பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக நிதி ஒதுக்குமாறு மத்திய அரசுக்கு, கேரள மாநில முதல்வர் பினராயி விஜய் கோரிக்கை விடுத்திருந்தார். பிரதமர் மோடியும் பாதிக்கப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு மத்திய அரசு போதுமான உதவிகளை செய்யும் என உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் கேரள மாநிலம் உருவான 68வது தினம் கேரளப்பிரவி (Keralappiravi) என்ற பெயரில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் கலந்து கொண்ட கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் கூறியதாவது:

வயநாடு நிலச்சரிவு சம்பவம் நடைபெற்று 90 நாட்கள் ஆகியும் மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு மத்திய அரசு சிங்கிள் பைசா கூட ஒதுக்காதது கொடூரமான புறக்கணிப்புக்கு ஆதாரம்.

மற்ற மாநிலங்கள் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும்போது, அந்த மாநிலங்கள் கேட்பதற்கு முன்னதாகவே மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. அனால் கேரளா உதவி கேட்டபோதிலும் ஒதுக்கப்படுவதில்லை. எனவே, மத்திய அரசின் இந்த புறக்கணிப்பு வேண்டுமென்றே மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்டது.

கேரள மாநில உயர்நீதி மன்றமும், மாநில சட்டமன்றமும், மத்திய அரசுக்கு 1202 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க வேண்டும் என வலியுறுத்திய போதிலும், மத்திய அரசு தர தயாராக இல்லை.

மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு, மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் தலைமையிலானயு.டி.எஃப்(எதிர்க்கட்சி) ஆகியவைமாநிலத்தில்முன்னேற்றம் மீது அக்கறை காட்டவில்லை.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த எஸ்.ஐ. குடும்பத்திற்கு நிவாரணம் அறிவிப்பு

சென்னை, நவ.2

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த எஸ்.ஐ. குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக (எஸ்.ஐ.) பணிபுரிந்து வந்த சரவணன் (36) த/பெ.வேலு என்பவர் இன்று 31.10.2024 அதிகாலை சுமார் 1.00 மணியளவில் பரமக்குடி நகரில் இரவு நேர ரோந்துப் பணியின்போது கீழே விழுந்த இருப்புக் கம்பத்தை அகற்றும் போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.



உதவி ஆய்வாளர் சரவணன் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். உதவி ஆய்வாளர் சரவணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழுப்புரம் மாவட்டம்.மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் ஐப்பசி மாத அமாவாசை ஊஞ்சல் உற்சவம்

விழுப்புரம் , நவ. 2

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் ஐப்பசி மாத அமாவாசை இரவு 10.30 மணிக்கு நடைபெறுகிறது இதை முன்னிட்டு அதிகாலை முதல்வர் அங்காளம்மன் .பால் தயிர்.இளநீர் தேன் உள்ளிட்ட முதல் பொருட்களுடன் கொண்டு அபிஷேகம் ஆராதனையும் நடைபெற்றது தொடர்ந்து அங்காளம்மன் உனக்கு



தங்கநகை கவசம்.அணிவிக்கப்பட்டது மகா.தீபாரனை நடைபெற்றது தொடர்ந்து உற்சவர் அங்காளம்மனுக்கு பல மலர்களால் கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது சிறப்பு பூஜைகளும் சிறப்பு தீபாரணை நடைபெற்றது இரவு 10.30 மணிக்கு மேல தாளம் வடக்கு . வாசல் வழியாக உற்சவர் அங்காளம்மன் சிறப்பு அலங்காரத்தில் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்து பக்தர்களுக்கு அருள் பலிக்கிறார் விழாவிற்கு ஏற்பாடுகளை

இந்து சமய அறநிலைதுறை உதவியாளர் மேல்மலையனூர் ஜீவானந்தம் அறங்காவலர் குழு தலைவர் மதியழகன் அறங்காவலர்கள் சுரேஷ் ஏழுமலை பச்சையப்பன் சரவணன் வடிவேல் சந்தானம் மேளாளர் மணிகண்டன் உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்

# செஞ்சி அருகே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி எதிரில் விவசாயி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு

செஞ்சி, நவ. 2

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சோ.குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி ராஜேந்திரன் இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ஐந்து தவணையாக ரூபாய் 3,12,000க்கு 25 1/2 பவுன் நகையை அடகு வைத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 2021 ஆம் வருடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வங்கியில் ஏற்பட்ட முறை கேட்டினால் 2021 ஆம் வருடம் சம்மந்தபட்ட விவசாயி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நகையை திருப்பி கேட்ட போது வங்கி நிர்வாகத்தினர் நகையை திருப்பி தர நகைக்கு உண்டான அசல் மற்றும் வட்டித்தொகையை அசல் உடன் சேர்த்து வட்டி தொகையும் செலுத்த கூறியுள்ளனர் அதற்கு விவசாயி பணம் கட்ட தயாரான நிலையில் வங்கி ஊழியர்கள் நகையை திருப்ப திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டனர்

இது தொடர்பாக சம்மந்தபட்ட அதிகாரிகளை கேட்ட பொழுது உரிய நடவடிக்கை எடுக்காமல் அலைகழித்த நிலையில்




மீண்டும் விவசாயி கடந்த 25 ஆம் தேதி சென்று நகையை கேட்டபொழுது 3ஆண்டுக்குவட்டி தொகையை அதிகரித்து வட்டி தொகையானது ஒரு லட்சத்து 68ஆயிரம் கட்ட வேண்டும் என வங்கி தரப்பில் கூறப்பட்டதாக சொல்லப்படுகிறது இதனால் விவசாயி கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இன்று வங்கி அலுவலகம் எதிரே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அதிகாரிகளின் அலட்சியபோக்கான செயலை கண்டித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

## சென்னை: கிளாம்பாக்கம் வரும் பயணிகளுக்காக சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கம்

சென்னை, நவ.2

நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாப்படும் பண்டிகைகளில் மிக மிக முக்கியமானது தீபாவளி பண்டிகை ஆகும். பொதுமக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த தீபாவளி பண்டிகை நேற்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது. தீபாவளி பண்டிகையை சொந்த ஊரில் கொண்டாடுவதற்காக சுமார் 13 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சென்னையில் இருந்து பஸ், ரெயில்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர். இதுதவிர பலர் சொந்த கார்களிலும், வாடகை கார்களிலும், மேலும் சில விமானங்களிலும் சென்று இருக்கின்றனர்.

தீபாவளிக்கு மறுநாளான இன்று (நவ. 1) அரசு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதால், பெரும்பாலான மக்கள் விடுமுறை முடிந்து திங்கள்கிழமை அதிகாலை சென்னைக்கு வர திட்டமிட்டு தங்கள் பகுதிகளிலிருந்து ரெயில்களிலும், சிறப்பு பஸ்களிலும் புறப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதியான கிளாம்பாக்கத்தில் உள்ள புதிய பேருந்து நிலையம் வரை மட்டுமே வெளியூரிலிருந்து வரும் பஸ்கள் இயக்கப்படும் என்பதால், அங்கிருந்து சென்னையின் வெவ்வேறு பகுதிகளுக்கு மக்கள் செல்ல வசதியாக திங்கள்கிழமை (நவ. 4) அதிகாலை முதல் புறநகர் சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. அதன்படி, காட்டாங்குளத்தூர் முதல் தாம்பரம் ரெயில் நிலையம் வரை சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்பட உள்ளன. இந்த சிறப்பு ரெயில்கள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகாமையிலுள்ள பொத்தேரி ரெயில் நிலையத்தில் கூடுதல் நேரம் நின்று செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காட்டாங்குளத்தூர் ரெயில் நிலையத்திலிருந்து திங்கள் கிழமை (நவ. 4) அதிகாலை 4 மணிக்கு முதல் ரெயில் புறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, 4.30, 5.00, 5.45, 6.20 மணிக்கு அடுத்தடுத்து ரெயில்கள் புறப்படும் என்று கூறப்பட்டுள்ளது.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் ஆலம்பூண்டி கிராமத்தில் மிராக்கில் டிரஸ்ட் மூலம் மாற்றுத்திறனாளிகளுடன் ஓசையில்லா தீபாவளி விழா கொண்டாடப்பட்டது. மேலும் பறவைகள் மற்றும் வனவிலங்குகள் அச்சம் இன்றி வாழ ஓசையில்லா விழா கொண்டாட விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. நிறுவனர் அம்புரோஸ் வரவேற்றார். ஆலம்பூண்டி செயின்ட் ஜோசப் சர்ச் முதல் பங்குத் தந்தை அருட்பணி. அசோக் குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# நடிகர் சிவகார்த்திகேயனின் அமரன் படத்திற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, நவ.2

ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து இன்று திரையரங்கில் வெளியாகியிருக்கும் படம் அமரன். ராஜ்கமல் பிலிம்ஸ் இப்படத்தை தயாரித்துள்ள நிலையில் ஜிவி பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். மறைந்த முன்னாள் ராணுவ வீரர் மேஜர் முகுந்தின் வாழ்க்கையைத்தழுவி இப்படம் உருவாகியுள்ளது. இதில் சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும் முகுந்தின் மனைவி இந்துவாக சாய் பல்லவி நடித்துள்ளார். உலகளவில் கிட்டதட்ட 900க்கும் மேற்பட்ட திரையரங்கில் அமரன் திரைப்படம் வெளியாகியுள்ளது

இந்த படம் இந்த திரையரங்குகளில் ரிலீசாகியுள்ள நிலையில் பிரபலங்களுக்கு சிறப்பு காட்சிதிரையிடப்பட்டது. குறிப்பாகமுதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், நடிகர் சிவகார்த்திகேயன், துணை முதல்அமைச்சர் உதயநிதி மற்றும் பட தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் படத்தை பார்த்து மகிழ்ந்தனர்.

இந்நிலையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

நண்பர் கலைஞானி கமலஹாசனின் அன்பு அழைப்பை ஏற்று, நேற்று #அமரன் திரைப்படம் பார்த்தேன். புத்தகங்களைப் போல் திரைப்பட வடிவிலும் உண்மைக் கதைகளை இன்றைய இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களது வீரத்தையும் அர்ப்பணிப்பையும் உணர்வுப்பூர்வமாகப் படமாக்கியுள்ள இயக்குநர் ராஜ்குமார், மேஜர் முகுந்த் வரதராஜன் இந்து ரெபேக்கா வர்கீஸ் ஆகியோரது பாத்திரங்களைத் தங்களது நடிப்பால் சிறப்பாக வெளிப்படுத்திய தம்பி சிவ கார்த்திகேயன், சாய்பல்லவி

மற்றும் #அமரன் படக்குழுவினர் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!

நாட்டைப் பாதுகாக்கும் நமது இராணுவ வீரர்களுக்கும் நம் நினைவில் வாழும் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களுக்கும் பிக்சல்யூட்! என பதிவிட்டுள்ளார்.

# சேலம் மத்திய சிறையில் கைதிகள் தயாரித்த தீபாவளி பலகாரங்கள்: விற்பனை அமோகம்




சேலம், நவ.2

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சேலம் மாநகர் அஸ்தம்பட்டி பகுதியில் உள்ள சேலம் மத்திய சிறைச்சாலையில் கைதிகளால் தயாரிக்கப்பட்ட தீபாவளி பலகாரங்கள் முதல் பல்வேறு உணவு வகைகளின் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. கடந்த 15 நாட்களில் 20க்கும் மேற்பட்ட கைதிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பேக்கரி உணவுகள் உள்ளிட்டவை 'பிரிசன் பஜார்' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக இங்கு தயாரிக்கப்படும் பிரெட், சேலம் அரசு மருத்துவமனை நோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது. கைதிகள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தும் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதில் விற்பனையாகும் உணவுப் பொருட்களின் லாபத்தில் 20 சதவீதம் கைதிகளுக்கே வழங்கப்படுகிறது. கைதிகளால் தயாரிக்கப்பட்ட இனிப்புகாரவகைகளை காவல் துறை அதிகாரிகளும் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

# பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம்: மேலும் 3 பள்ளிகளில் விசாரணை நடத்த கோர்ட்டு உத்தரவு



சென்னை, நவ.2

கிருஷ்ணகிரியில் உள்ள 4 தனியார் பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம் நடத்தி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளிக்கப்பட்டது தொடர்பான வழக்கின் விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் எனக்கோரி வழக்கறிஞர் சூரியபிரகாசம் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில்,வழக்குதொடர்பான அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 4 பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வேறு பள்ளிகளிலும் இது போன்ற முகாம்கள் நடத்தப்பட்டதா என்று விசாரிக்கப்பட்டு வருவதாகதெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான சிவராமனின் மரணம் தொடர்பான வழக்கில் சேலம் நீதிமன்ற நீதிபதியின் அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் அரசு தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதையடுத்து, போலி என்.சி.சி. முகாம் நடத்தப்பட்டதாக கூறப்படும் ஒரு பள்ளியில் மட்டும் தான் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றும், மற்ற 3 பள்ளிகளிலும் விசாரணை நடத்தி விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை நவம்பர் 13ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# சென்னையில் காற்று மாசு அதிகரிப்பு... 3 இடங்களில் காற்றின் தரம் மோசம்



சென்னை, நவ2

தீபாவளி பண்டிகை இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் காலை முதலே பட்டாசுகளை வெடித்து கொண்டாடி வருகின்றனர். இதனால், சென்னைமாநகரம்காலையிலேயே புகைமூட்டமாக மாறியது.

இந்நிலையில், சென்னையில் தொடர்ந்து இன்று காற்று மாசு அதிகரித்த வண்ணம் உள்ளது. சென்னையில் 3 இடங்களில் காற்றின் தரக்குறியீடு மோசமடைந்துள்ளது. சென்னையில் எந்த ஒரு பகுதியிலும் காற்றின் தரம் நன்றாக இல்லை என மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் தெரிவித்துள்ளது. சென்னையைப் பொருத்தவரை காலை 7 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் காற்று மாசுபாட்டின் அளவு 190 ஆக தரக்குறியீட்டில் பதிவாகியுள்ளது.அதிகபட்சமாக மணலியில் 254, அரும்பாக்கத்தில் 210, பெருங்குடியில் 201 என்ற அளவில் காற்றின் தரக்குறியீடு மோசம் அடைந்துள்ளது. கொடுங்கையூரில் 159, மணலியில் 181, ராயபுரத்தில் 164, வேளச்சேரியில் 163 மிதமாக காற்று மாசு அதிகரித்துள்ளது.

# மதுரையில் ரெயில் தடம் புரண்டு விபத்து



மதுரை, நவ.2

சென்னை சென்ட்ரலில் இருந்து போடி செல்லும் ரெயில் மதுரை அருகே தடம் புரண்டு விபத்திற்குள்ளானது. ரெயிலின் சக்கரத்தில் ஏற்பட்ட பழுதால் ரெயில் தடம் புரண்டதாக தகவல் வெளியாகி உள்ளது. போடிநாயக்கனூர் ரெயிலின் சக்கரத்தை மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபடு வருகின்றனர். ரெயிலின் கடைசி பெட்டியான மாற்றுத்திறனாளி பெட்டி தண்டவாளத்தில் இருந்து கீழே இறங்கியதாக கூறப்படுகிறது.

# விஜய் கேட்ட கேள்வி சரியானதுதான்: முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை, நவ.2

த.வெ.க. மாநாட்டில் மாநில அரசு குறித்து விஜய் கேட்ட கேள்வி சரியானதுதான் என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது ஜெயக்குமார் கூறியதாவது;

"மத்திய அரசு பாசிசத்தை நோக்கி செல்கிறது. அப்படியென்றால் மாநில அரசு எதை நோக்கி செல்கிறது? அது பாசிசம் என்றால் இது பாயாசமா?

என்று விஜய் கேட்ட கேள்வி சரியானதுதான். போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது பாசிசம் இல்லையா? எதிர்க்கட்சிகள் ஒடுக்கப்படுவது பாசிசம் இல்லையா?

அரசைஎதிர்த்துகேள்வி கேட்டால் சிறைவாசம் என்ற வகையில், தமிழகத்தை ஆளும் திராவிட மாடல் அரசு பாசிசத்தை கையில் எடுக்கிறதா? என்பதைத்தான் விஜய் கேட்டிருக்கிறார். அவர் கேட்ட கேள்வியில் எந்த தவறும் இல்லை."

இவ்வாறு ஜெயக்குமார் தெரிவித்தார்.

# பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: அ.தி.மு.க. நிர்வாகி போக்சோவில் கைது

தஞ்சாவூர், நவ.2

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள பண்ணவயல் கிராமத்தைச் சேர்ந்தவர் புஷ்பநாதன். இவருடைய மகன் தீபன்(வயது 33). இவர், தஞ்சை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளராக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டார். தீபன் அதே பகுதியைச் சேர்ந்த அரசு பள்ளியில் 12ம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அந்த மாணவி பட்டுக்கோட்டை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வழக்குப்பதிவு செய்து போக்சோ சட்டத்தின் கீழ் தீபனை கைது செய்து பட்டுக்கோட்டை குற்றவியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கோவில் அருகே கண்டெடுக்கப்பட்ட ராக்கெட் லாஞ்சர் திருச்சியில் பரபரப்பு




திருச்சி, நவ.2

திருச்சி மாவட்டத்தில் உள்ள அந்தநல்லூரில் பிரசித்தி பெற்ற சிவன்கோவில் அமைந்துள்ளது. அந்த கோவிலின் அருகே காவிரி ஆற்றின் படித்துறை உள்ளது. இந்த படித்துறையில் இன்று மாலை ராக்கெட் லாஞ்சர் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் ஜீயபுரம் காவல்நிலைய போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அங்கு விரைந்து வந்த போலீசார், ராக்கெட் லாஞ்சரை பத்திரமாக கைப்பற்றி வெடிகுண்டு சோதனை நிபுணர்களிடம் ஒப்படைத்தனர். நாளைய தினம் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், இன்று ராக்கெட் லாஞ்சர் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், காவிரி ஆற்றில் கடந்த சில நாட்களாக நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. ஒக்கேனக்கல் காவிரி ஆற்றில் இருந்து அதிகப்படியான நீர் வெளியேற்றப்பட்ட நிலையில், அந்த நீரில் ராக்கெட் லாஞ்சர் அடித்து வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. தொடர்ந்து இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தீபாவளி: சிறப்பு முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதல்அமைச்சர்



சென்னை, நவ.2

தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் செயல்பட்டு வரும் 108 அவசரகால மேலாண்மை மையத்தில் (108 Emergency Response Center), தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னேற்பாடு பணிகளை துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்விற்கு பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

தீபாவளி நேரத்தில் விபத்துக்களை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நம்முடைய முதல்அமைச்சரின் உத்தரவின்பேரில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, 108 அவசரகால சேவை மையத்திற்கு ஒரு நாளைக்கு சராசரியாக 12 ஆயிரம் அழைப்புகள் வருவது வழக்கம். ஆனால், தீபாவளி நேரம் என்பதால், 20 ஆயிரம் அழைப்புகள், அதாவது 60 சதவீதம் அளவுக்குஅதிகமானஅழைப்புகள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக, Emergency Management Center3 shiftலும், கூடுதலாக, 50 பேர் பணி அமர்த்தப்பட்டு, மொத்தம் 194 நபர்கள் அழைப்புகளை ஏற்கும் வகையில் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வழக்கத்தை விட கூடுதலாக தீக்காயங்களும் மற்றும் சாலை விபத்துகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதற்காக ஏற்கனவே கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் தீ விபத்து (FIRE ACCIDENT) நோயாளிகளை எதிர்கொள்ள 75 படுக்கை வசதி கொண்ட ஸ்பெசல் வார்டு உள்ளது.

தீபாவளி தீக்காயங்களை எதிர்கொள்ள ஏதுவாக, ஆம்புலன்ஸ் ஓட்டுனர்கள், அவசரகால மருத்துவ உதவியாளர்கள் மற்றும் அவசரகால மேலாண்மை மையத்தில் பணிபுரிபவர்களுக்கு தேவையான அறிவுரைகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நேரத்தில், சென்னை மற்றும் புதுக்கோட்டை அவசரகால மேலாண்மை மையங்கள் இணைந்து செயல்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த 3 நாட்களுக்கும் தடையின்றி ஆம்புலன்ஸ்களை இயக்குவதற்கு முதல்அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்புடனும், பத்திரமாகவும் தீபாவளியை கொண்டாடுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மக்கள் விருப்பப்பட்டால் மீண்டும் ராமநாதபுரத்தில் போட்டியிடுவேன் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி



ராமநாதபுரம், நவ.2

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் தேவர் ஜெயந்தியையொட்டி, முன்னாள்முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு, தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஓ.பன்னீர்செல்வம் கூறியதாவது:

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் ஜெயந்தி விழாவையொட்டி அவருக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில்ஆண்டுதோறும் இங்கு வருகிறோம். அ.தி.மு.க. சார்பில் தேவருக்கு செய்யப்பட்ட அனைத்து திட்டங்களும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா நல்லாட்சி காலத்தில் செய்யப்பட்டவை. மக்கள் விருப்பப்பட்டால் ராமநாதபுரத்தில் மீண்டும் போட்டியிடுவேன்.

நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்கியதும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தேன். மாநாட்டை அனைவரும் பாராட்டும் வகையில் நடத்தி இருக்கிறார். எதிர்காலத்தில் அவர் எந்த இலக்கை நோக்கி செல்கிறார் என்பதை பார்த்துதான், இனி கருத்து சொல்ல முடியும். எங்களை பொறுத்தவரையிலும், தமிழக மக்கள், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோரின் தூய தொண்டர்களை பொறுத்தவரையில் அ.தி.மு.க. ஒன்றிணைந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற சூழல் உருவாகி உள்ளது என்பதை உறுதியாக கூறுகிறேன். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சையாக ராமநாதபுரத்தில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தது. இங்கு 3 லட்சம் வாக்குகள் எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகளில் 33 சதவீதம் பெற்ற ஒரே சுயேச்சை வேட்பாளர் நான்தான் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் பொதுமக்களும், தொண்டர்களும் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பது நிரூபணம் ஆகிஉள்ளது.என்னைதோற்கடிக்க 6 பன்னீர்செல்வத்தை தேர்தல் களத்தில் இறக்கினார்கள் என்பது உங்களுக்கே தெரியும். 2026ம் தேர்தலின்போது நல்ல முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# சிங்கப்பூர், கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு கடத்தி வரப்பட்ட ரூ.1.16 கோடி தங்கம் பறிமுதல் 4 பேர் கைது

கே.கே. நகர், நவ.2

திருச்சி விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் மற்றும் கோலாலம்பூருக்கு அதிக அளவில் இயக்கப்படும் விமானங்களில் வரும் பயணிகள் தங்கத்தை கடத்தி வருவது தொடர் கதையாக இருந்து வருகிறது. இதனை பறிமுதல் செய்யும் வகையில் சுங்கத்துறை அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இந்த நிலையில் தீபாவளி திருநாளை முன்னிட்டு வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருவது அறிந்து சுங்கத்துறை அதிகாரிகள் தங்களது நடவடிக்கைகளை அதிகப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் நேற்று சிங்கப்பூர் மற்றும் கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு வந்த விமானங்களில் பயணம் செய்த 4 பயணிகளின் நடவடிக்கைகளில் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

உடனே அதிகாரிகள் அவர்களை தனியே அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அப்போது அவர்கள் டிக்கெட் பாக்கெட் மற்றும் கைப்பையில் 8 செயின் வடிவிலான தங்கத்தையும், 2 வளையல் வடிவிலான தங்கத்தையும் மறைத்து கொண்டு வந்தது தெரியவந்தது.

இதையடுத்து அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் மொத்தம் 1488 கிராம் ஆகும். இதன் மதிப்பு ரூ.1.16 கோடி ஆகும். தங்கத்தை கடத்தி வந்த 4 பயணிகளையும் அதிகாரிகள் போலீசில் ஒப்படைத்தனர். அவர்களை போலீசார் கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.

# தீபாவளி பண்டிகை... ரூ.115 கோடிக்கு ஆவின் இனிப்பு மற்றும் காரவகைகள் விற்பனை

சென்னை, நவ.2

தீபாவளி பண்டிகை நாளை (வியாழகிழமை) நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட உள்ளது. இந்த நிலையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, ஆவின் பாலகங்களில் சிறப்பு இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும் நிலையில், தற்போது வரை ரூ.115 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



இதுகுறித்து ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"பொதுமக்கள் இடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள ஆவின் பால் மற்றும் பால் உபப்பொருட்கள், சுமார் 4.5 லட்சம் கிராமப்புற உற்பத்தியாளர்களிடம் இருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை இணையம் மூலமாக சுகாதாரமான முறையில், தரம் ஒன்றை குறிக்கோளாகக் கொண்டு, பால் மற்றும் சுமார் 200 வகையான பால் உபப்பொருட்களைத் தயாரிக்கப்பட்டு நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் பால் விற்பனையில் தமிழ்நாட்டின் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இதன் மூலம் ஆவின் நிறுவனம் கிராம அளவில் உள்ள இலட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை பெரிய அளவில் மேம்படுத்த உதவுகிறது. தீபாவளியை முன்னிட்டு பல்வேறு வகையான சிறப்பு இனிப்புகள் மற்றும் கார வகைகள் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களிடையே இவ்வகையான சிறப்பு இனிப்புகள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள தனியார் தொழில் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அரசு அலுவலகங்களை அணுகி அவர்களுக்கு தேவையான

இனிப்பு மற்றும் கார வகைகள் விநியோகிக்கப்பட்டது. தற்போது வரை சுமார் ரூ.115 கோடி இனிப்பு மற்றும் கார வகைகள் உள்ளிட்ட ஆவின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டை விட ரூ.10 கோடி அதிகமாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்" எனக் கூறப்பட்டுள்ளது.

# தமிழக அரசின் 'கபீர் புரஸ்கார் விருது' விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, நவ.2

தமிழக அரசின் சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருதை பெறுவதற்கு தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;




"சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்திற்கான 'கபீர் புரஸ்கார் விருது', ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதல்அமைச்சரால், குடியரசு தின விழாவின்போது வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களும் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத் துறை மற்றும் அரசுப் பணியாளர்களின் சமுதாய நல்லிணக்க செயல், அவர்கள் ஆற்றும் அரசுப் பணியின் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில் நீங்கலாக) இவ்விருதினைப் பெற தகுதியுடையவராவர்.

இவ்விருதானது, ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி, இன, வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக் கலவரத்தின் போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது வெளிப்படையாகத் தெரிகையில் அவரது உடல் மற்றும் மனவலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. இவ்விருதானது மூன்று அளவுகளில், தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ரூ.20,000/, ரூ.10,000/ மற்றும் ரூ.5,000/க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும்.

2025ஆம் ஆண்டு, குடியரசு தினத்தன்று வழங்கப்படவுள்ள கபீர் புரஸ்கார் விருதிற்கு தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள்/பரிந்துரைகள் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே 15.12.2024அன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.


உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு, முதல் அமைச்சரால் 26.01.2025 குடியரசு தினத்தன்று விருது வழங்கி கவுரவிக்கப்படுவர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, நவ.2

இந்தியாவில் விமானங்களுக்கு அடிக்கடி வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. உள்நாடு, வெளிநாடுகளுக்கு செல்லும் விமானங்கள் வெடிகுண்டு மிரட்டலால் அவசர அவரமாக தரையிறக்கப்படுகின்றன. கடந்த சில நாட்களில் 300க்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.




மிரட்டலை தொடர்ந்து விமானங்கள் தரையிறக்கப்பட்டு சோதனை செய்யப்படுகின்றன. சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்துள்ளது. சமூக வலைதள பக்கங்கள் மூலம் இந்த மிரட்டல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்திற்கு இன்று வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. விமான நிலைய கழிவறையில் திரவ வடிவிலான வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலைய இயக்குனர் அலுவலகத்திற்கு மர்ம இமெயில் வந்துள்ளது.


இதையடுத்து, விமான நிலையம் முழுவதும் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் போலி என்பது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், விமான நிலையத்திற்கு இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதலனை கரம்பிடிக்க எஸ்.ஐ. வேடம் போட்ட இளம்பெண்; காதல் ஜோடியை கைது செய்த போலீஸ்

கன்னியாகுமரி, நவ.2

கன்னியாகுமரி மாவட்டம் வடசேரியைச் சேர்ந்தவர் சிவா. இவருக்கு ரெயில் பயணத்தின்போது சென்னை அருகே தாம்பரத்தைச் சேர்ந்த அபி பிரபா என்ற பெண்ணுடன் காதல் ஏற்பட்டுள்ளது. இந்த காதல் விவகாரம் குறித்து சிவா தனது தாயிடம் தெரிவித்த நிலையில், அவரது தாயோ தன் மகனை பெண் போலீசுக்குதான் திருமணம் செய்து கொடுப்பேன் என கூறியதாக தெரிகிறது.



இதனால் தனது காதலி அபி பிரபாவிடம் எஸ்.ஐ. வேடமணிந்து வருமாறு சிவா கூறியுள்ளார். இதன்படி அபி பிரபா எஸ்.ஐ. வேடம் அணிந்து சிவாவின் தாயாரை சந்தித்திருக்கிறார். மேலும் அபி பிரபா தாம்பரம் ரெயில் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக சிவாதனது தாயாரிடம் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் இந்த விஷயம் ஊர் முழுக்க பரவிய நிலையில், வடசேரி போலீசார் விசாரணை மேற்கொண்டு உண்மையை கண்டறிந்தனர். இதையடுத்து எஸ்.ஐ. போல் வேடமணிந்து ஏமாற்றிய அபி பிரபாவையும், அவரது காதலரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல்: பட்டாசு வெடிக்கும் ஆர்வத்தில் சிறுவர்கள் செய்த செயல் வீட்டில் இருந்த பொருட்கள் எரிந்து சேதம்

திண்டுக்கல், நவ.2

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அண்ணாநகரைச் சேர்ந்தவர் மணிகண்டன். இவர் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக பல்வேறு பட்டாசு வகைகளை வாங்கி வந்து, தனது வீட்டின் முதல் மாடியில் உள்ள அறையில் வைத்திருந்தார். இன்று தீபாவளி பண்டிகை முன்னிட்டு, மணிகண்டனின் மகன்கள், பட்டாசு வைத்திருந்த அறையில் இருந்து பட்டாசுகளை எடுத்து வெடித்துள்ளனர்.




இந்நிலையில், பட்டாசு வெடிக்கும் ஆர்வத்தில், எரிந்த நிலையில் இருந்த ஊதுபத்தியை பட்டாசு வைத்திருந்த அறையிலேயே சிறுவர்கள் மறந்து வைத்துவிட்டு வெளியே வந்துவிட்டனர். சிறிது நேரத்தில், ஊதுபத்தியில் இருந்து பரவிய தீ காரணமாக பட்டாசு வெடித்து சிதற ஆரம்பித்தது.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த மணிகண்டன், தீயை அணைக்க முயன்றுள்ளார். ஆனால் தீயை அணைக்க முடியாததால், நத்தம் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் வீட்டில் இருந்த பொருட்கள் எரிந்து சேதமடைந்தன. அதே சமயம், வீட்டில் இருந்த அனைவரும் தக்க சமயத்தில் வெளியேறியதால், அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சம்பவம் குறித்து நத்தம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேலத்தில் வவ்வால்களை பாதுகாக்க தீபாவளிக்கு பட்டாசு வெடிக்காத கிராமம்

சேலம், நவ.3

சேலம் மாவட்டம் அம்மாபேட்டையில் உள்ள அய்யாசாமி பசுமை பூங்காவில் பல ஆயிரக்கணக்கான வவ்வால்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றை பாதுகாக்கும் நோக்கில், வவ்வால்களை பாதிக்காத விதத்தில் தீபாவளியைக் கொண்டாட அம்மாபேட்டை மண்டல குழு தலைவர் தனசேகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஈசன் இளங்கோ உள்ளிட்டோர் தூய்மை பணியாளர்களுடன் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதன்படி சுமார் 5,000 குடும்பங்களுக்கு வாட்ஸ்அப் மூலம் சுற்றுச்சூழலுக்கு வவ்வால்கள் செய்யும் நன்மை குறித்து குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது. அதோடு தீபாவளிக்கு அதிக ஒளி எழுப்பக்கூடிய வெடிகளை வெடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், வவ்வால்களை பாதுகாக்க அங்குள்ள கிராம மக்கள் பட்டாசு வெடிக்காமல் தீபாவளியை கொண்டாடி வருகின்றனர்.

இதே போல், வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகராட்சிக்கு உட்பட்ட காமாட்சியம்மன் பேட்டையைச் சேர்ந்த மக்கள், தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதை தவிர்த்து வருகின்றனர்.

அங்குள்ள பழமை வாய்ந்த 5 புளியமரங்களில் ஆயிரக்கணக்கான வவ்வால்கள் வசிப்பதாகவும், அவற்றை பாதுகாக்கவே தீபாவளி மட்டுமின்றி, எந்தவொரு நிகழ்வுக்கும் தங்கள் பகுதியில் பட்டாசு வெடிப்பதில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# உரிமைகளை வென்றெடுக்க வளர்ச்சி மாடலை உருவாக்க வேண்டும் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, நவ.2

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை மாகாணம் என்ற பெயரிலான பெருநிலப்பரப்பு 68 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் ஒன்றாம் நாளான இதே நாளில் தான் மொழிவாரி மாநிலங்கள் தத்துவத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு, இன்றைய தமிழ்நாடு உருவாக்கப்பட்டது. அந்த வகையில் நவம்பர் ஒன்றாம் தேதி தான் உண்மையான தமிழ்நாடு நாள். இந்த நாளில் தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் எனது தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது அதை நாம் சகோதர உணர்வுடன் ஏற்றுக் கொண்டோம்; நமது நிலப்பரப்பை சகோதர மாநிலங்களுக்கு விட்டுக் கொடுத்தோம். நம்மிடமிருந்து நிலத்தை பெற்றுக் கொண்ட திராவிட மாநிலங்கள் எதுவுமே நமக்கு நீரைக் கூட தர மறுக்கின்றன. அதனால் தான் கூறுகிறேன்... மொழிவாரி மாநிலங்களால் நாம் அடைந்ததை விட இழந்தது அதிகம். நாம் இழந்த உரிமைகள் உள்ளிட்ட அனைத்தையும் மீட்டெடுக்க இந்த நாளில் உறுதியேற்போம்!

அரை நூற்றாண்டுக்கும் மேலாக திராவிடம் என்ற காலாவதியாகிப் போன தத்துவத்தைப் பேசி நமது உரிமைகளை இழந்து வருகிறோம். தமிழ்நாடு என்றால் தமிழ் என்ற அடையாளத்தை தமிழகம் இழந்து வருகிறோம். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தமிழ்நாடு அதன் திறனுக்குரிய வளர்ச்சியை எட்ட வேண்டும். அதற்காக வளர்ச்சி மாடல் அரசை உருவாக்க வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தவும் இந்த நாளில் நாம் உறுதி ஏற்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை செல்லூரில் ரூ.11.9 கோடியில் புதிய கால்வாய்: முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, நவ.2

மதுரையில் வெள்ள பாதிப்பு குறித்து முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை செய்த நிலையில், செல்லூர் கண்மாயிலிருந்து நீர் வெளியேற ரூ. 11.9 கோடி மதிப்பீட்டில் பணிகள் உடனடியாக மேற்கொள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் தேவர் திருமகனார் ஜெயந்தியை முன்னிட்டு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மரியாதை செலுத்தினார். அதன்பின்னர் மதுரை வந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், வணிக வரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட கலெக்டர், மதுரை மாநகராட்சி ஆணையர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் மதுரையில் வெள்ளபாதிப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது மதுரையில் பெருமழையால் பாதிக்கப்பட்ட செல்லூர் பகுதி மீண்டும் அவ்வாறு நேராதிருக்க உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணியாக 290 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கால்வாய் அமைக்க வேண்டியதன் தேவை குறித்து முதல் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் செல்லூர் கால்வாயிலிருந்து நீர் வெளியேறுவதற்கு சிமெண்ட் கால்வாய் 11.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட உத்தரவிட்டார். இதன்மூலம் இப்பகுதி மக்கள் பெரிதும் பயனடைவர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி



# மின்சாரம் தாக்கி காவல் உதவி ஆய்வாளர் உயிரிழப்பு: டி.டி.வி.தினகரன் இரங்கல்



சென்னை, நவ.2

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு தினத்தையொட்டி ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பங்களை அகற்றும்போது, மின்சாரம் தாக்கி பரமக்குடி காவல் உதவி ஆய்வாளர் சரவணன் (வயது 36) மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். கொடிகம்பம் மின் கம்பியில் பட்டதில் உதவி ஆய்வாளர் சரவணன் பரிதாபமாக உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில்மின்சாரம் தாக்கி உயிரிழந்த காவல் உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் குருபூஜை மற்றும் ஜெயந்தி விழா நிகழ்வில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பரமக்குடி காவல் உதவி ஆய்வாளர் சரவணன், மின்விபத்தில் உயிரிழந்ததாக வரும் செய்தி மிகுந்த வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கிறது.

காவல் உதவி ஆய்வாளர் சரவணனை இழந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு,அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# தீபாவளியை முன்னிட்டு வடபழனியில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்; நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம்



சென்னை, நவ.2

தீபாவளி பண்டிகை இன்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்கள் புத்தாடைகளை அணிந்து, தங்கள் குடும்பத்தினருடன் பட்டாசுகளை வெடித்தும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இனிப்புகளை வழங்கியும்பண்டிகையை கொண்டாடி வருகின்றனர்.

இதற்கிடையில், சென்னையில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இருப்பினும் பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை பெய்யவில்லை.

இதனையடுத்து, பொது மக்கள் தீபாவளியை கொண்டாடும் விதமாக கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் சென்னை வடபழனியில் உள்ள பிரசித்தி பெற்ற முருகன் கோவிலில் இன்று பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலை முதலே பொதுமக்கள் குடும்பத்தோடு வருகை தந்து, நீண்ட வரிசையில் காத்திருந்து வடபழனி முருகனை தரிசனம் செய்து வழிபட்டனர். மாலை நேரத்தில் வடபழனி கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் கூட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தியாகராயர் அரங்கை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை கைவிட வேண்டும்:அன்புமணி ராமதாஸ்



சென்னை , நவ.2

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது ,

சென்னையில் சைதாப்பேட்டை, வியாசர்பாடி , திரு விக நகர் உள்ளிட்ட 9 இடங்களில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான செயற்கை புல்தரை கால்பந்து விளையாட்டுத் திடல்களை தனியாருக்கு தாரை வார்க்கும் முடிவை, பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட அமைப்புகளின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு மாநகராட்சி திரும்பப் பெற்றிருக்கிறது. பட்ட பிறகாவது சென்னை மாநகராட்சி அதன் முடிவை திரும்பப் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனாலும், மாநகராட்சியின் முடிவு முழுமையானதாக இல்லை.

கால்பந்து திடல்கள் மட்டும் தனியாரிடம் ஒப்படைக்கப்படுவது தவிர்க்கப்பட்டால் மட்டும்போதாது.ஏற்கனவே தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான டென்னிஸ் திடல், பேட்மிண்டன் திடல் , ஸ்கேட்டிங் மைதானம் , டேபிள் டென்னிஸ் மைதானங்கள் போன்றவையும் உடனடியாக திரும்பப்பெறப்பட வேண்டும்.

விளையாட்டுத் திடல்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதை விட அதிர்ச்சியளிக்கும் செயல், தியாகராய நகர் சர்.பிட்டி தியாகராயர் அரங்கம், செனாய் நகர் அம்மா அரங்கம் ஆகியவை தனியாருக்கு தாரைவார்க்கப்படுவது தான். மாநகராட்சியின் இந்த நடவடிக்கையால் தியாகராயர் அரங்கத்தை 24 மணி நேரம் பயன்படுத்துவதற்கான வாடகை இப்போதுள்ளரூ.20,650 லிருந்து ரூ.59,000 ஆக உயர்த்தப்படும். அம்மா அரங்கத்தின் வாடகை ரூ.3.40 லட்சத்திலிருந்து ரூ.5.40 லட்சமாக உயர்த்தப்படும். எளிய மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் அரங்குகளின் வாடகை மும்மடங்கு அளவுக்கு உயர்த்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தியாகராயர் அரங்கில் சில ஆயிரம் ரூபாய் செலவில் 3 மணி நேரத்திற்கான நூல் வெளியீடு உள்ளிட்ட இலக்கிய நிகழ்ச்சிகளை எளிய மனிதர்களாலும் நடத்தி விட முடியும். மாறாக, ரூ.59,000 செலுத்தி தான் நிகழ்ச்சிகளை நடத்த முடியும் என்றால் அதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும். எனவே, எளிய மக்கள் பொது நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியதன் தேவைகளைக்கருத்தில்கொண்டு, தியாகராய நகர் சர்.பிட்டி தியாகராயர் அரங்கம், செனாய் நகர் அம்மா அரங்கம் ஆகியவற்றை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை சென்னை மாநகராட்சி கைவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார் .

# தமிழகம் முழுவதும் பட்டாசு வெடித்து 82 பேர் காயம்: தீயணைப்புத் துறை தகவல்

சென்னை, நவ.2

நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாப்படும் பண்டிகைகளில் மிக முக்கியமானது தீபாவளி பண்டிகை ஆகும். பொது மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த தீபாவளி பண்டிகை இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன்படி புத்தாடைகள் அணிந்து தீபாவளியை பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர். உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் செல்போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்பியும் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் தங்களது தீபாவளி வாழ்துகளை பறிமாறிக் கொண்டனர். அக்கம்பக்கத்தில் வசிக்கும் மக்கள் ஒருவொருக்கொருவர் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டு இனிப்பு, காரம், முருக்கு, அதிரசம் வகைகளை பறிமாறிக்கொண்டனர். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை புத்தாடை அணிந்து பட்டாசு வெடித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களாகவே தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு சிறுவர்களும், இளைஞர்களும் ஆர்வத்துடன் பட்டாசு வெடித்து வந்தனர். இன்று தீபாவளி பண்டிகை என்பதால் காலை முதலே பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழகம் முழுவதும் பட்டாசு வெடித்ததில் 82 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டதாக தீயணைப்புத் துறை தகவல் தெரிவித்துள்ளது. மேலும்பட்டாசுவெடித்து தீ விபத்து ஏற்பட்டத்தில் ரூ.5 ஆயிரம் மதிப்பிலான பொருட்கள் சேதம் அடைந்துள்ளாதாகவும் தமிழகம் முழுவதும் பட்டாசு அல்லாமல் 11 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தீயணைப்புத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

# ஓசூரில் பட்டாசு வாங்க குவிந்த கூட்டம்; மாநில எல்லையில் கடும் போக்குவரத்து நெரிசல்


கிருஷ்ணகிரி, நவ.2

தீபாவளி பண்டிகை இன்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் மாநில எல்லை அருகே உள்ள கிருஷ்ணகிரி ஜூஜூவாடி, பாகலூர் உள்ளிட்ட இடங்களில் பட்டாசு கடைகள் அமைக்கப்பட்டு பாட்டாசுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, கர்நாடக மாநிலத்தில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பட்டாசுகளை வாங்கிச் செல்கின்றனர். அங்கு வாகனங்களை நிறுத்துவதற்கு போதிய இடம் இல்லாத காரணத்தால், பட்டாசு வாங்க வருபவர்கள் தங்கள் கார்கள், இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை சாலையோரங்களில் நிறுத்திவிட்டுச் செல்கின்றனர்.

இதுமட்டுமின்றி, அந்த பகுதியில் மேம்பாலம் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. இதனால் மாநில எல்லைப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்தை சரிசெய்யும் பணியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஓ.டி.டி.யில் வெளியானது 'பிளாக்' திரைப்படம்




'ஆசை ஆசையாய்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகர் ஜீவா. இவர் 'சிவா மனசுல சக்தி, கற்றது தமிழ், கொரில்லா, ரவுத்திரம், கலகலப்பு 2 போன்ற படங்களில் நடித்து தனக்கென ரசிகர்களை உருவாக்கி வைத்துள்ளார். இவர் தற்போது 'மாநகரம், டாணாக்காரன்' போன்ற படங்களை தயாரித்த பொட்டன்சியல் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள புதிய படத்தில் நடித்துள்ளார். அறிமுக இயக்குனர் கே.ஜி. பாலசுப்ரமணி இயக்கியுள்ள இந்த படத்தில் நடிகர் ஜீவா கதாநாயகனாகவும், நடிகை பிரியா பவானி சங்கர் கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். இப்படத்திற்கு சாம்.சி.எஸ் இசையமைத்துள்ளார். இந்த படத்திற்கு 'பிளாக்' என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும், விவேக் பிரசன்னா, யோக் ஜபீ, ஷாரா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்துக்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். திரில்லர் படமாக உருவாகியுள்ள இப்படத்தின் பார்ஸ்ட் லுக் போஸ்டர், டிரெய்லர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. பல திகிலூட்டும் காட்சிகள் இந்த டிரெய்லரில் இடம் பெற்றுள்ளன. அக்டோபர் 11ம் தேதி வெளியானபோது சில திரைகளே ஒதுக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து, படத்திற்குக் கிடைத்த வரவேற்பால் கூடுதல் திரைகள் ஒதுக்கப்பட்டிருப்பதாக படத்தின் தயாரிப்பாளர் எஸ். ஆர். பிரபு தெரிவித்திருந்தார். இந்தப் படம் உலகளவில் ரூ. 5 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளதாகத் தகவல் வெளியானது. இந்நிலையில் இந்த படம் அமேசான் பிரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியாகி உள்ளது. இது குறித்து தயாரிப்பு நிறுவனம் டிவிட்டரில் பதிவை வெளியிட்டுள்ளது.

# பவதாரணியின் கடைசிப் பாடல் வெளியானது



இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளும், யுவன்சங்கர் ராஜாவின் சகோதரியுமான பவதாரணி கடந்த ஜனவரி 25ம் தேதி புற்றுநோய் பாதிப்பால் உயிரிழந்தார். இந்நிலையில், அவர் இசையமைத்த 'புயலில் ஒரு தோணி' படத்தின் பாடலை யூடியூப்பில் படக்குழுவினர் நேற்று வெளியிட்டுள்ளனர். கருகருவா என்ற இந்தப் பாடலை சிநேகன் எழுதியுள்ளார். இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் குமார் மற்றும் பாடகி எம்.எம்.மானசி பாடியுள்ளனர்.

இயக்குநர் ஈசன் இயக்கிய இந்தப் படத்தில் புதுமுக நடிகர்கள் விஷ்ணுபிரகாஷ்மற்றும்அர்ச்சனாசிங்ஆகியோர்நடித்துள்ளனர். இந்தப் படத்தில் மொத்தம் இரண்டு பாடல்கள் உள்ள நிலையில், மற்றொரு பாடலை இசையமைப்பாளர் கார்த்திக் ராஜா நீண்ட இடைவெளிக்கு பிறகு பாடியுள்ளார்.

இந்தப் படத்தின் வெற்றியை பவதாரிணிக்கும் அர்ப்பணிப்போம் என்று படத்தின் இயக்குநர் ஈசன் கூறியுள்ளார்.

# ஷோபனா, மோகன்லால் நடிக்கும் 'எல் 360' படத்தின் படப்பிடிப்பு நிறைவு



மலையாள சினிமாவில் சூப்பர் ஸ்டாராக இருப்பவர் நடிகர் மோகன்லால். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான 'நெரு' திரைப்படம் பெரிய வரவேற்பை பெற்றதுடன் வசூலையும் குவித்தது. இதற்கடுத்து வெளியான 'மலைக்கோட்டை வாலிபன்' எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பை பெறவில்லை.

இதனையடுத்து மோகன்லால் தனது 360வது படத்தில் நடிக்கிறார். இப்படத்தை, இயக்குனர் தருண் மூர்த்தி இயக்குகிறார். 'ஆப்ரேஷன் ஜாவா', 'சவுதி வெள்ளக்கா' படங்களை இயக்கியதன் மூலம் இவர் கவனம் பெற்றார். இப்படத்திற்கு தற்காலிகமாக 'எல்360' என்று பெயரிடப்பட்டுள்ளது.ரஞ்சித்தயாரிக்கும்இப்படத்திற்கு ஜேக்ஸ் பிஜாய் இசையமைக்கிறார்.

இப்படத்தில் மோகன்லாலுடன் நடிகை ஷோபனா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 1985ல் முதன்முதலாக மோகன்லால் ஷோபனா இணைந்து 'அவிடத்தி போலே இவிடேயும்' என்ற படத்தில் நடித்தார்கள். கடைசியாக 2004ல் மாம்பழக்காலம் என்ற படத்தில் இணைந்து நடித்தார்கள்.

தற்போது மீண்டும் 20 வருடங்களுக்கு பிறகு இணைந்து நடித்துள்ளனர். சமீபத்தில், படப்பிடிப்பு வீடியோவை 'எல் 360' படக்குழு வெளியிட்டிருந்தநிலையில், தற்போது படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக இயக்குனர் புகைப்படம் வெளியிட்டு தெரிவித்திருக்கிறார். மேலும், வரும் 8ம் தேதி அடுத்த அப்டேட் வெளியாகும் என்றும் தெரிவித்துள்ளார். அதன்படி, அன்று இப்படத்தின் பெயர் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மும்பை இந்தியன்ஸ் அணியில் மீண்டும் விளையாட சம்மதித்தது ஏன்..? ரோகித் சர்மா விளக்கம்



இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் அடுத்தாண்டு நடைபெற உள்ளது. இதற்கு முன்னதாக வீரர்களுக்கான மெகா ஏலம் இந்த மாத இறுதியில் நடைபெற உள்ளது. மெகா ஏலத்திற்கு முன்னதாக ஒவ்வொரு அணியும் அதிகபட்சமாக 6 வீரர்கள் வரை தக்கவைக்க அனுமதிஅளிக்கப்பட்டுஇருந்தது.மேலும்தக்கவைக்கப்பட்ட வீரர்களின்பட்டியலைஐ.பி.எல்.நிர்வாகத்திடம்சமர்ப்பிக்கும் காலக்கெடு நேற்றுடன்முடிவுக்குவந்தது.அதன்படிஅனைத்து அணிகளும் தக்க வைக்கப்பட்ட வீரர்களின் பட்டியலை சமர்ப்பித்து விட்டன.

இதில் அனைவரும் எதிர்பார்த்த 5 முறை சாம்பியன் ஆன மும்பை இந்தியன்ஸ் அணி 5 வீரர்களை தக்கவைத்துள்ளது. இதன்படி ஜஸ்பிரித் பும்ரா (ரூ.18 கோடி), சூர்யகுமார் யாதவ் (ரூ.16.35 கோடி), ஹர்திக் பாண்டியா (ரூ.16.35 கோடி), ரோஹித் சர்மா (ரூ.16.30 கோடி), திலக் வர்மா (ரூ.8 கோடி) ஆகியோரை அந்த அணி தக்க வைத்துள்ளது.


முன்னதாககடந்தசீசனில்கேப்டன்பதவியில்இருந்தரோகித்சர்மாநீக்கப்பட்டுஅவருக்குபதிலாககுஜராத்டைட்டன்ஸ் அணியிலிருந்து டிரேடிங் முறையில் வாங்கப்பட்ட ஹர்திக் பாண்ட்யாவை கேப்டனாக நியமித்தது ரசிகர்களிடையே அந்த அணி மீது விமர்சனத்தை ஏற்படுத்தியது.

அதன் காரணமாக நிச்சயம் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஐ.பி.எல். தொடரில் ரோகித் சர்மா மும்பை அணியில் விளையாட மாட்டார் என்று கடந்த பல மாதங்களாக பல்வேறு கருத்துகள் உலா வந்தன. ஆனால் நேற்று மும்பை அணி வெளியிட்ட தங்களது அணி வீரர்களின் பட்டியலில் தக்க வைத்த ஐந்து வீரர்களில் ரோகித் சர்மாவும் இடம் பிடித்துள்ளார்.

இந்நிலையில் மும்பை அணியில் மீண்டும் விளையாட இருப்பது குறித்து பேசிய ரோகித் சர்மா கூறுகையில், "உங்களுக்கே தெரியும் நான் சர்வதேச டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விட்டேன். அதன் காரணமாக தற்போது நான் தக்க வைக்கப்பட்டிருக்கும் இடம் சரிதான் என்று நினைக்கிறேன். ஏனெனில் தற்போதைய இந்திய டி20 அணியில் விளையாடும் வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில் என்னை விட மற்ற வீரர்களுக்கு சம்பளம் அதிகமாக கொடுத்ததில் மகிழ்ச்சிதான். தற்போதைய இடத்தில் நான் இருக்கும் நிலையும் எனக்கு திருப்தியாகத்தான் உள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் ஒரு பகுதியாக மீண்டும் நான் இடம் பெற்று இருப்பதில் மகிழ்ச்சி. மும்பையில்தான் நான் கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தேன். இங்கு நிறைய கிரிக்கெட்டும் விளையாடியுள்ளேன். இந்த நகரம் எனக்கு சிறப்பு வாய்ந்தது. மீண்டும் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட உள்ளது நல்ல உணர்வுகளை கொடுத்திருக்கிறது" என்று கூறினார்.

# அனைத்து சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கும் நன்றி கான்வே



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் மெகா ஏலம் நவம்பர் மாதம் இறுதியில் நடக்க இருக்கிறது. அதற்கு முன்பாக தக்கவைக்கும் வீரர்களின் பட்டியலை அணிகள் நேற்று ஐ.பி.எல். நிர்வாகத்திடம் சமர்ப்பித்தன. ஒரு அணி அதிகபட்சமாக 6 வீரர்கள் வரை தக்கவைக்க அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி ஐ.பி.எல்லில் பங்கேற்கும் 10 அணிகளும் தாங்கள் தக்க வைத்துள்ள வீரர்களின் விவரங்களை அறிவித்துவிட்டன.

அதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 5 வீரர்களை தக்கவைத்துள்ளது. அதன்படி எம்.எஸ்.தோனி, ருதுராஜ் கெய்க்வாட், ரவீந்திர ஜடேஜா, ஷிவம் துபே மற்றும் மதீசா பதிரானா ஆகிய 5 வீரர்களை அந்த அணி தக்கவைத்துள்ளது.

இருப்பினும் அந்த அணியிலிருந்து கழற்றி விடப்பட்ட இந்தியாவை சேர்ந்த தீபக் சாஹர், நியூசிலாந்தை சேர்ந்தரச்சின்ரவீந்திரா, டேரில்மிட்செல்மற்றும்கான்வே ஆகியோர்சென்னைசூப்பர்கிங்சின்ரசிகர்களிடையே பெயர்பெற்றவர்கள். அதிலும் குறிப்பாக கான்வே 2022 மற்றும் 2023 ஆகிய 2 சீசன்களில் மட்டுமே விளையாடி இருந்தாலும், 2023 சீசனில் சென்னை அணி கோப்பை வெல்வதில் முக்கிய பங்காற்றினார். இதனால் அவர் சென்னை அணியின் ரசிகர்களால் அதிகம் கொண்டாடப்படும் வீரர்களில் ஒருவர்.

தக்க வைக்கப்பட்ட வீரர்களின் பட்டியலில் தனது பெயர் இடம்பெறாத நிலையில் கான்வே சென்னை சூப்பர்கிங்ஸ் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள்ளார். இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "அற்புதமான 2 வருட ஆதரவிற்காக சிஎஸ்கேவின் அனைத்து விசுவாசமான ரசிகர்களுக்கும் நன்றி" என்று பதிவிட்டுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.